# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2480 - 2026 මාර්තු මස 13 වැනි සිකුරාදා - 2026.03.13

2480 ஆம் இலக்கம் - 2026 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 02 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2026, ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2026, மாச்சு மாதம் 20 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோரால,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு

## வடமேல் மாகாண மாகாண அரசாங்க சேவையின் இலங்கை தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) III ஆந் தர பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

வடமேல் மாகாண மாகாண அரசாங்க சேவையில் இலங்கை தொழில்நுட்ப சேவையின் பின்வரும் பதவிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ள பெண் / ஆண் ஆகிய இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| *குறியீட்டு எண்* | *பதவிப் பெயர்* | *ஆட்சேர்ப்பு செய்யப்படும் அடிப்படை* | *வெற்றிடங்கள்* |
|---|---|---|---|
| 01. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) III ஆந் தரம் | நிரந்தர அடிப்படையில் | 18 |
| 02. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) ஒரு வருட பயிற்சித் தரம் | ஒரு வருட பயிற்சித் தரம் | |
| 03. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) இரண்டு வருட பயிற்சித் தரம் | இரண்டு வருட பயிற்சித் தரம் | |

- மேலே உள்ள குறியீட்டு எண் 01 இன் கீழ் தகுதியான விண்ணப்பதாரர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லாவிட்டால், வாய்ப்பு எண் 02 இற்குச் செல்லும். 01 மற்றும் 02 க்கு தகுதியான விண்ணப்பதாரர்களின் மொத்த எண்ணிக்கை போதுமானதாக இல்லாவிட்டால், வாய்ப்பு எண் 03 இற்குச் செல்லும்.

இப்பரீட்சை வடமேல் மாகாண மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2026 ஏப்பிறல் மாதம் குருநாகல் நகரில் இருக்கும் பரீட்சை நிலையமொன்றில் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தரப்படுகின்றது. இப்பரீட்சையை பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

**01. கல்வித் தகைமைகள் மற்றும் தொழிற் தகைமைகள் :**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள சகல பதவிகளுக்கும்,

**(அ) கல்வித் தகைமைகள் :**

பௌதீகவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களுடன் கணிதப் பாடவிதானத்தைச் சேர்ந்த பாடங்கள் மூன்றுடன் (03) கூடிய க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையை ஒரே தடவையில் சித்தியெய்திருத்தல்.

அல்லது

தொழில்நுட்பவியல் பாட விதானத்தின் பொறியியல் தொழில்நுட்பவியல், தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் உள்ளிட்ட பாடங்கள் மூன்றில் க.பொ.த. (உயர் தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியெய்திருத்தல்.

மற்றும்

சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் உள்ளடங்கலாக மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த.) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

*க.வே.* - மேற்கூறிய கல்வித் தகைமைகளுடன் ஒவ்வொரு பதவிக்குமான பின்வரும் தொழிற் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**(ஆ) தொழிற் தகைமைகள்:**

| *பதவிப் பெயர்* | *தொழிற் தகைமை* |
|---|---|
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) III ஆந் தரம். | I. மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் பதவிக்குரிய துறையில் பாடநெறியொன்றினைப் பயின்று தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>II. தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் பதவிக்குரிய துறையில் பாடநெறியொன்றினைப் பயின்று தேசிய பொறியியல் தேசிய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>III. கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் பதவிக்கு உரித்தான துறையில் பாடநெறியொன்றைப் பயின்று தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>அல்லது<br>IV. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் பதவிக்குரிய துறையில் பாடநெறியொன்றினைப் பயின்று தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>V. இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பதவிக்கு உரித்தான துறையில் பொறியியல் பரீட்சையின் I ஆம் பகுதியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.<br>அல்லது<br>VI. தொழிற்துறைக்கு உரித்தான தேசிய தொழிற் தகைமையின் (NVQ) 06 ஆம் மட்டத்துடைய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.<br>அல்லது<br>VII. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களுடன் கருத்துக்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் மேற்கூறிய தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமையைப் பெற்றிருத்தல். |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) ஒரு வருட பயிற்சித் தரம் | I. மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் கல்லூரியில் பதவியுடன் தொடர்புடைய துறையில் பாடநெறியொன்றை பயின்று தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br>அல்லது |

| *பதவிப் பெயர்* | *தொழிற் தகைமை* |
|---|---|
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) ஒரு வருட பயிற்சித் தரம் | II. உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் மேற்கூறிய தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமையைப் பெற்றிருத்தல். |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) இரண்டு வருட பயிற்சித் தரம் | தொழிற் தகைமைகள் ஏற்புடையதற்றது. |

*க.வே.* - மேற்படி சகல கல்வித் தகைமைகள் மற்றும் தொழிற் தகைமைகள் 2026.03.31 ஆந் திகதிக்கு முழுமைப்படுத்தி சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**02. ஏனைய தகைமைகள் :**

2.1 விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் என்பதோடு, நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

2.2 எல்லா விண்ணப்பதாரர்களும் வடமேல் மாகாணத்தினுள் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றுவதற்கும் பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமானளவு உடல், உள தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2.3 விண்ணப்பதாரி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அண்மிய 03 வருட காலமாவது வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வசிப்பாளர் என்பதை கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ் (DS-04 கிராம அலுவலர் சான்றிதழ்) மூலம் நேர்முகப்பரீட்சையின் போது உறுதிப்படுத்த வேண்டும். **விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 03 வருடங்களுக்கு குறைவான காலம் வடமேல் மாகாணத்தில் குடியிருப்பாளராக இருக்கும் விண்ணப்பதாரிகளும் DS 04 கிராம அலுவலர் சான்றிதழ் மூலம் தாங்கள் வசித்து வரும் காலம் உறுதி செய்யப்பட வேண்டும்.**

2.4 விண்ணப்பதாரி விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு 03 வருடங்களுக்கு குறைவான காலம் வடமேல் மாகாணத்தில் குடியிருப்பாளராக இருக்கும் சந்தர்ப்பத்தில், விண்ணப்பதாரியின் வாழ்க்கைத் துணையும் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு அண்மிய 03 ஆண்டுகளில் வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவைக் கொண்டிருந்தால், அவ்விண்ணப்பதாரிகள் தொடர்பில் மேற்படி 2.3 ஆம் பிரிவின் படி கவனத்திற் கொள்ளப்படுவார்கள். **வாழ்க்கைத் துணையின் வதிவிடச் சான்றிதழ் (DS 04) மற்றும் விவாகச் சான்றிதழை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.**

2.5 குறித்த பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டால் குறைந்தபட்சம் 10 வருடங்கள் வடமேல் மாகாணத்தினுள் சேவையாற்றுதல் வேண்டும்.

2.6 விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 40 வயதுக்கு மேற்படாதிருத்தலும் வேண்டும்.

2.7 விண்ணப்பதாரர் விண்ணப்பங்களை கோரும் இறுதித் திகதிக்குள் அனைத்து தகுதிகளையும் நிர்ணயிக்கப்பட்ட வயதையும் பூர்த்தி செய்திருந்தால் மட்டுமே, இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்குத் தேவையான தகுதிகளைப் பூர்த்தி செய்ததாகக் கருதப்படுவார்.

**குறிப்பு : ஏதேனும் சமயப் பிரிவொன்றின் துறவிப் பதவியை வகிக்கும் ஒருவர் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை அற்றவராவார்.**

**03. சம்பள அளவுத்திட்டம் :**

**3.1 தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) III ஆந் தரம்**

இப்பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 2025.01.01 ஆந் திகதிய மற்றும் 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை அட்டவணை I இன் MN 3 -2025 இன் பிரகாரம்,

ரூபா. 52,250 - 10x 800 - 11 x 1190 - 10 x 1320 - 10 x 1350 - 100,040.00 ஆகும்.

(2027.01.01 ஆந் திகதி வரை இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி அவ் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்)

**3.2 தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒரு வருட பயிற்சித் தரம்/ இரண்டு வருட பயிற்சித் தரம்**

அ.நி.சு. 10/2025 இன் அட்டவணை இலக்கம் VI இன் படி பயிற்சியளிக்கும் தரத்திற்கு உரித்தான மாதாந்த கொடுப்பனவு ரூபா 41,317.00 ஆன தொகையில் ஆரம்பித்து தொடர்ந்து கொடுப்பனவு வழங்கப்படும் என்பதோடு, பயிற்சிக் காலத்தின் முடிவில் III ஆந் தரத்திற்கு நியமனம் பெற்றதன் பின்னர் மேற்படி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள MN 3 - 2025 இற்கு உரித்தான சம்பள அளவுத்திட்டத்தின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

**04. சேவை நிபந்தனைகள் :**

4.1 இந் நியமனம் நிரந்தரமானது. சேவைக்குரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும்.

4.2 இப்பதவிக்கு நியமிக்கப்படுவது, மூன்று (03) வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும் என்பதோடு, அவர் தகுதிகாண் காலத்தினுள் தமது கடமைகள் மற்றும் நடத்தை திருப்திகரமானதாக பேணிச் செல்லப்பட்டிருப்பின் மற்றும் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்திருப்பின் மற்றும் சேவையில் உறுதிப்படுத்துவதற்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருப்பின் பிற தகுதிகாண் காலம் நிறைவுற்றவுடன் சேவையில் உறுதிப்படுத்தப்படுவார்.

4.3 அரசகரும மொழி அல்லாத மொழி மூலம் ஒன்றினால் சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்களினால் உரிய அரசகரும மொழித் தேர்ச்சியை தகுதிகாண் காலத்தினுள் பெற்றிருத்தல் வேண்டும்.

4.4 2020.10.16 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு நேரிடையான சுற்றறிக்கைகளுக்கு அமைவாக நியமனம் பெற்று 03 வருடங்கள் கடந்து செல்ல முன் சேவையில் இணைந்து கொண்ட மொழி ஊடகத்திற்கு மேலதிகமாக பிற அரசகரும மொழி / மொழிகள் தொடர்பான தேர்ச்சியை உரிய மட்டத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4.5 III ஆந் தரத்தில் 05 வருடத்தை தாண்டுவதற்கு முன்னர் ஆங்கில மொழியில் க.பொ.த. (சா.தரம்) திறமைச் சித்தி மட்டத்திற்கு சமனான மட்டத்தில் உள்ள தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4.6 இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் / பதவி உயர்வு வழங்கும் நடைமுறை ஒழுங்கு விதி மற்றும் அதற்கமைய ஒப்படைக்கப்படும் பொறுப்புக்களுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், வடமேல் மாகாண சபைகள் நடைமுறை ஒழுங்கு விதிகள், வடமேல் மாகாண சபைகள் நிதி ஒழுங்கு விதிகளுக்கும், ஒழுக்காற்று நடவடிக்கை சட்டக் கோவைகளுக்கும், திணைக்கள கட்டளைகளுக்கும், வடமேல் மாகாண சபைகள் தொழில்நுட்ப சேவையின் சேவைப் பிரமாணத்திற்கும், அரச மற்றும் வடமேல் மாகாண சபை மூலம் வெளியிடப்பட்டுள்ள மற்றும் அவ்வப்போது விதிக்கப்படும் ஏனைய ஏற்பாடுகளுக்கும் மற்றும் கட்டளைகளுக்கும் அமைய செயற்படுவதற்கு சகல உத்தியோகத்தர்களும் கடப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும்.

**05. இரு வருடப் பயிற்சித் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்படும் உத்தியோகத்தர்களுக்கு விசேட நிபந்தனைகள் :**

5.1 பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற உத்தியோகத்தர்கள் சேவையில் நிரந்தரப்படுத்துவதற்காக பிற நிபந்தனைகளுக்கு மேலதிகமாக பின்வரும் தொழிற் தகைமைகள் முழுமைப்படுத்தியிருத்தல் வேண்டும்.

(அ) பயிற்சித் தரத்திற்கு நியமனம் பெற்று 04 வருடங்களினுள் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் கல்லூரி ஒன்றில் பதவியுடன் தொடர்புடைய துறையில் வார இறுதி நாட்களைக் கொண்ட 03 வருட பாடநெறியை வெற்றிகரமாக பயின்று தேசிய தொழில்நுட்ப சான்றிதழைப் பெற்றிருத்தல். (உதா: தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் சிவில்)

அல்லது

(ஆ) பயிற்சி தரத்தில் இணைத்துக் கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் வடமேல் மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் பதவியுடன் தொடர்புடைய துறையில் வதிவிடப் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக பயின்று NVQ 5 சான்றிதழைப் பெற்றிருத்தல். (இந்த வதிவிடப் பயிற்சிப் பாடநெறியைப் பயில்வதற்கு முன்னர் குறித்த திணைக்களத் தலைவருடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடல் வேண்டும்)

**06. ஆட்சேர்ப்பு முறை :**

6.1 எழுத்துப் போட்டிப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். பரீட்சைப் பாடத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்துள்ள விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமையின் ஒழுங்குவரிசையின் படி முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படும். முன்னுரிமைப் பட்டியலின் ஒழுங்கிற்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். உரிய கல்வி மற்றும் தொழிற் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிட எண்ணிக்கையினை விடக் குறைவாக இருப்பின் அவர்களுக்கு எழுத்துப் பரீட்சையின்றி நேர்முகப் பரீட்சையின் மூலம் மாத்திரம் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

6.2 நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படுவதில்லை என்பதோடு கல்வி, தொழிற்கல்வி உள்ளிட்ட அடிப்படை தகைமைகளைப் பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் உடற் தகைமைகளும் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

6.3 III ஆந் தரத்திற்கு நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்குப் போதுமானளவு எண்ணிக்கையினர் தகுதி பெற்றுள்ள போது III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

6.4 III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குப் போதுமானளவு எண்ணிக்கையினர் தகுதி பெற்றிராத போது எஞ்சிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஒரு வருட பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். அவ்வாறு இணைத்துக் கொள்ளப்படுகின்ற விண்ணப்பதாரிகள் ஒரு வருட பயிற்சிக் காலப்பகுதியினை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியெய்ததன் பின்னர் III ஆந் தரத்திற்கு நியமனம் செய்யப்படுவார்கள்.

6.5 ஒரு வருட பயிற்சித் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் தொடர்ந்தும் வெற்றிடங்கள் நிலவினால் இரண்டு வருட பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். அவ்விண்ணப்பதாரிகள் இரண்டு வருட பயிற்சிக் காலப்பகுதியினுள் வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியெய்ததன் பின்னர் III ஆந் தரத்திற்கு நியமனம் செய்யப்படுவார்கள்

**குறிப்பு : மேற்படி பயிற்சிக் காலப் பகுதியின் முடிவில் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியெய்துவதற்கு தவறுகின்ற பயிலுநர்கள் இருப்பின் அவர்களுக்கு ஆறு (06) மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கு தங்களது பயிற்சிக் காலத்தை நீடிப்புச் செய்ய வாய்ப்பளிக்கப்படுகின்றது. அவ்வாறு நீடிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத பயிலுநர்களின் சேவை முடிவுறுத்தப்படும்.**

07. எழுத்துப் பரீட்சை :

7.1 எழுத்துப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் மாத்திரம் நடைபெறும் என்பதோடு, விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

7.2 இப்பரீட்சையானது இரு வினாப் பத்திரங்களைக் கொண்டதாக அமையும். விரிவான பரீட்சைப் பாடத் திட்டங்கள் பின்வருமாறு அமைந்துள்ளது.

7.3 இரண்டு வருட பயிற்சித் தரத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் விடயத்துடன் தொடர்புடைய தொழில்நுட்ப பரீட்சையில் தோற்றுவது அவசியமில்லை.

| *வினாப் பத்திரம்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடையவதற்கு பெறப்படவேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவுத் தேர்வு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. விடயத்துடன் தொடர்புடைய தொழில்நுட்ப பரீட்சை | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |

பாடத்திட்டம் :

**01. நுண்ணறிவுத் தேர்வு**

விண்ணப்பதாரியின் மொழித் தேர்ச்சி, கணிதத் திறன் மற்றும் தர்க்கத் திறனை அளவிட்டுப் பார்ப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள குறுகிய மற்றும் பல்தேர்வு கட்டமைப்புடைய வினாக்களைக் கொண்டுள்ளது.

**02. விடயத்துடன் தொடர்புடைய தொழில்நுட்ப பரீட்சை**

**தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) III ஆந் தரம், தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) ஒரு வருட பயிற்சித் தரம்**

கட்டிட நிர்மாணம் பற்றிய கோட்பாடுகள், கட்டுமாணப் பணிகளுக்கான வரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றினை படித்துப் புரிந்துகொள்ளும் திறன், மதிப்பீடுகளைத் தயாரிக்கும் திறன், நீர் வழங்கல், வடிகாலமைப்பு நடவடிக்கைகள் மற்றும் கழிவுகளை அகற்றும் நடைமுறைகள் பற்றிய அறிவை பரீட்சார்த்தியிடம் காணப்படுகின்ற பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய திறன்களை மதிப்பிடுவதற்காக இந்த வினாக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

08. பரீட்சைக் கட்டணம் :

பரீட்சைக் கட்டணமாக ரூபா 1,200.00 ஆன தொகையை வடமேல் மாகாண சபையின் 2003.02.13 ஆம் இலக்க வருமானத் தலைப்பில் வரவு வைக்கப்படுமாறு வடமேல் மாகாண சபையின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பணம் செலுத்தி தனது பெயரில் பெற்றுக்கொள்ளும் வ.மே.மா.ச.நி. 02 பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டி சமர்ப்பித்தல் வேண்டும். வ.மே.மா.ச.நி. 02 ஆம் படிவப் பற்றுசீட்டினைத் தவிர, வேறு பற்றுச்சீட்டுக்கள் மற்றும் காசுக் கட்டளைகள் அல்லது பணம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், அவ்வாறான பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்பட

மாட்டாது எனவும், ஏதேனும் ஒரு காரணத்தினால் அல்லது செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது எனவும், அப்பரீட்சைக் கட்டணம் வேறு எந்தவொரு அல்லது பரீட்சைக்கும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது எனவும் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். (பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியை தம் வசம் வைத்திருப்பது எதிர்காலத்தில் பிரயோசனப்படும்.)

**09. விண்ணப்பிக்க வேண்டிய நடைமுறை :**

9.1 இவ்வறிவித்தலின் முடிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் A4 அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2026.03.31 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் **"செயலாளர், வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு, வடமேல் மாகாண சபை கட்டிடத் தொகுதி, குருநாகல்"** என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் மேல் இடதுபக்க மூலையில் **"தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) பதவிக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026"** எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

9.2 உரிய மாதிரிப் படிவத்துக்கு ஏற்புடையதற்ற அல்லது உரிய திகதிக்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத அல்லது தாமதமாக கிடைக்கப்பெறுகின்ற அல்லது தெளிவற்ற மற்றும் சரியாக பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புக்களும் இன்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக தயாரிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி ஆராய்வது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். முறையாக விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தாமையினால் ஏற்படக்கூடிய நட்டங்களை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றுக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக் கொள்வது பிரயோசனப்படும். விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறியத்தரப்பட மாட்டாது.

9.3 விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகுதிகளை நிரூபிக்க, அந்தந்த சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகல்கள் இணைக்கப்பட வேண்டும்.

9.4 விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.03.31 ஆகும்.

**10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:**

விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ நொத்தாரிசு ஒருவர்/ முப்படையின் அதிகாரி/ பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூ. 71,240.00 க்கு மேற்பட்ட ஆரம்ப அடிப்படை மாதச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரசாங்க / மாகாண அரசாங்க சேவையின் பதவி நிலை அதிகாரி ஒருவர் அல்லது பௌத்த விகாரை ஒன்றின் பொறுப்பாளர் பிக்கு அல்லது ஒரு தலைமை பௌத்த பிக்கு அல்லது வேறு எந்த மதத்தின் வழிபட்டுத் தலத்திலும் பதவியில் இருப்பவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

11. விண்ணப்பப்படிவங்களை நிரப்பும் போது சரியான தகவல்களை வழங்குவது தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்துதல் வேண்டும். அத்தகவல்களை எவ்விதத்திலும் திருத்தியமைப்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், அவரது பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானவை என எப்போதாவது தெரியவருமிடத்து அவரை வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்க முடியும்.

12. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அத் திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் சரியாக பூரணப்படுத்தி அனுப்பி வைத்துள்ள விண்ணப்பங்களை பரிசோதித்து, இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பதவிகளுக்கு விண்ணப்பிப்பதற்கு தகைமைகளைக் கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும், வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகளை அனுப்பப்பட்ட உடனேயே வடமேல் மாகாண சபையின் (www.psc.nw.gov.lk) என்ற இணையத்தளத்தில் அறிவித்தலொன்று பிரசுரிக்கப்படும். பரீட்சை நடைபெறுகின்ற தினத்திற்கு 03 நாட்களுக்கு முன்னர் பரீட்சை அனுமதிப்பத்திரம் கிடைக்கப்பெறாது விடின், உடனடியாக வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவிற்கு தெரிவிக்கப்படல் வேண்டும்.

13. போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதானது விண்ணப்பதாரி இந்த பதவிக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதப்பட மாட்டாது. தகைமைகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கடித ஆவணங்களின் மூலப் பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்கு உரித்தான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

14. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்தி தாம் தோற்றுகின்ற சகல பாடங்களிற்கும் தமது ஆளடையாளத்தை பின்வரும் ஆவணங்களின் மூலம் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் நிரூபிக்க வேண்டும்.

(அ) ஆட்களை பதிவு செய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.

அல்லது

(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு / செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

குறிப்பு: பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பரீட்சார்த்தி தவறும்பட்சத்தில் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவராகக் கருதப்படுவார்.

15. இப்பரீட்சையை நடாத்துதல் அல்லது நடத்தாதிருத்தல், பிற்போடல் தொடர்பான அல்லது நடாத்தியதன் பின்னர் தேர்ந்தெடுத்தல் அல்லது வெற்றிட எண்ணிக்கைகள் தொடர்பிலான இறுதித் தீர்மானம் வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்தில் உள்ளது. அதேபோன்று இந்த அறிவித்தலில் ஏற்பாடுகளாக குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் காணப்படுமாயின், அது தொடர்பில் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் விசாரித்து வடமேல் மாகாண கௌரவ ஆளுநரினால் முடிவுகள் எடுக்கப்படும்.

16. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலே சரியானதாக கருத்தில் கொள்ளப்படும்.

வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டணக்கு ஏற்ப,

என்.எம்.ஜே. பிரனாந்து,
செயலாளர்,
வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு,
மாகாண சபை அலுவலக கட்டிடத் தொகுதி,
குருநாகல்.

2026, பெப்புருவரி 26.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

| |
|---|
| |

அலுவலக உபயோகத்திற்காக

**வடமேல் மாகாண மாகாண அரசாங்க சேவையின் இலங்கை தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) III ஆந் தர பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் ( உரிய கூட்டினுள் √ அடையாளத்தை இடுக )

சிங்களம் ☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐

| *விண்ணப்பிக்கும் பதவி / பதவிப் பெயர்* | *குறியீட்டு எண்* |
|---|---|
| | |
| | |
| | |

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் ( சிங்களம் / தமிழில்)
திரு/ திருமதி/ செல்வி ……………………………………………………………………………………………………

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலகெப்பிடல் எழுத்துக்களில்)
Mr./Miss/Mrs./ ……………………………………………………………………………………………………

1.3 முழுப் பெயர் ( சிங்களம் / தமிழில்)
திரு./ திருமதி/ செல்வி ……………………………………………………………………………………………………

1.4 முழுப் பெயர் (ஆங்கிலகெப்பிடல் எழுத்துக்களில்)
Mr./Miss/Mrs./ ……………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………

1.5 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்

| | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | |

02. 2.1 நிரந்தர முகவரி ( சிங்களம் / தமிழில் )
……………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………

2.2 நிரந்தர முகவரி (ஆங்கிலகெப்பிடல் எழுத்துக்களில்)
……………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………

2.3 அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கிலகெப்பிடல் எழுத்துக்களில்)
……………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………

2.4 தொலைபேசி இலக்கம் …………………………………………. WhatsApp இலக்கம் ………………………………

2.5 மின்னஞ்சல் முகவரி (email) :…………………………………………………………………………………

03. 3.1 பால் : பெண் ☐ ஆண் ☐

3.2 பிறந்த திகதி : ஆண்டு ………………………….. மாதம் ………………………….. திகதி …………………………

3.3 2026.03.31 திகதிக்கு வயது: வருடங்கள் ……………….. மாதங்கள் ……………… நாட்கள் …………………

04. 4.1 விண்ணப்பதாரி வதியும் நிர்வாக மாவட்டம் : ……………………………………………………………………………………

4.2 பிரதேச செயலாளர் பிரிவு : ………………………………………………………………………………………………

4.3 கிராம அலுவலர் பிரிவு : …………………………………………………………………………………………………

4.4 2026.03.31 ஆம் திகதிக்கு வடமேல் மாகாண நிர்வாகப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவுக் காலம்.:
ஆண்டுகள் …………………………. மாதங்கள் …………………………………. நாட்கள் ……………………………….

05. கல்வி மற்றும் தொழில் தகைமைகள்:

5.1 க.பொ.த. (சா.த.) பரீட்சை தொடர்பான விபரங்கள்
பரீட்சை ஆண்டு ………………… மாதம் ……………… சுட்டெண் ……………………………

| | *பாடம்* | *பெறுபேறு* | | *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 3. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

5.2 க.பொ.த. (உ .த.)
பரீட்சை ஆண்டு ………………… மாதம் ……………… சுட்டெண் ……………………………

| | *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

5.3 தொழில் தகைமைகள்:

| *நிறுவனம்* | *கற்ற பாடநெறி* | *கால எல்லை* | *பெறுபேறு* | *சான்றிதழ் இலக்கம் மற்றும் திகதி* |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |

06. பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை தொடர்பான விபரங்கள்:

6.1 பற்றுச் சீட்டு இலக்கம் …………………………… தொகை ………………………………… திகதி ………………………………
கட்டணம் செலுத்திய பிரதேச செயலகம் ………………………………………………………………………………………

| பற்றுசீட்டை இங்கே ஒட்டவும் |
|---|

**07. விண்ணப்பதாரியின் உறுதியுரை:**

(அ) இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் ஏற்றவாறு உண்மை என உறுதிப்படுத்துகிறேன். இங்கு ஒரு பகுதி பூரணப்படுத்தப்படாமை மற்றும் பிழையாக பூரணப்படுத்துவதால் ஏற்படக் கூடிய நட்டங்களை ஏற்றுக் கொள்வதற்கு உடன்படுகிறேன்.

(ஆ) என்னால் வழங்கப்படும் உறுதியுரை பொய்யானது என உறுதிப்படுத்தப்பட்டால் பதவிக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் தகுதியற்றவாராவேன் என்பதையும், பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னால் பதவியில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

| | |
|---|---|
| ……………………………….. | …………………………………….. |
| திகதி | விண்ணப்பதாரியின் கையொப்பம் |

**08. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்.**

விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரச பாடசாலை ஒன்றின் அதிபர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ நொத்தாரிசு ஒருவர்/ முப்படையின் அதிகாரி/ பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர் அல்லது ரூ. 71,240/- க்கு மேற்பட்ட ஆரம்ப அடிப்படை மாதச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் அரச சேவையின் நிரந்தர பதவி ஒன்றினை வகிக்கும் பதவி நிலை அதிகாரி ஒருவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./ திருமதி/ செல்வன்/ செல்வி ……………………………………………………… என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் …………………… ஆம் திகதி என் முன்னிலையின் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதி செய்கிறேன்.

| | |
|---|---|
| கையொப்பம் | : ...................................................................... |
| உறுதிப்படுத்துபவரின் பெயர் | : ...................................................................... |
| பதவி, உத்தியோகபூர்வ முத்திரை | : ...................................................................... |
| திகதி | : ...................................................................... |

03-189

மத்திய மாகாண சபையின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## மத்திய மாகாண மாகாண அரசாங்க சேவையின், மாகாண இறைவரி சேவையின் வகுப்பு 3 தரம் II இற்கு வரி உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026

மத்திய மாகாண மாகாண அரசாங்க சேவையின், மாகாண இறைவரி சேவையின் வகுப்பு 3 தரம் II வரி உத்தியோகத்தர்கள் பதவியில் நிகழும் 02 வெற்றிடங்களை நிரப்புவதற்காக கீழ் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளை 2026.04.02 ஆம் திகதிக்கு பூர்த்தி செய்துள்ள மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவினைக் கொண்ட ஆண், பெண் இருசாராரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி 2026.04.02 ஆகும்.

1. தகைமைகள் :-

1.1. பொதுத் தகைமைகள்:-

1.1.1. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

1.1.2. சிறந்த நன்நடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

1.1.3. விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய 03 வருடங்கள் தொடர்ச்சியாக மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவுடையவராக இருத்தல் வேண்டும்.

1.1.4. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதியளவு உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.1.5. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரர் 18 வயதுக்கு குறையாதவராகவும், 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும் .(அதாவது, 2008.04.02 ஆம் திகதி அல்லது அதற்கு முன்பதாக பிறந்த மற்றும் 1991.04.02 ஆம் திகதி அல்லது அதற்கு பின்னர் பிறந்த விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரமே இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியும். ஏற்கனவே மத்திய மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவிகளில் உள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதன்று)

1.1.6. ஏதேனுமொரு சமயமொன்றின் துறவியாக உள்ள எந்தவொரு நபரும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவராவார்.

1.1.7. ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அவசியமான அனைத்து தகைமைகள் மற்றும் நிபந்தனைகளை, அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்யுமாறு இவ்வறித்தலில் குறிப்பிட்டுள்ள திகதிக்கு எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

1.2. கல்வித் தகைமைகள் : -

1.2.1. இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரியாக அல்லது சட்டத்தரணியாக இருத்தல்

அல்லது

1.2.2. அரசாங்க பட்டய கணக்காளர் நிறுவனத்தின் உள்ளக இடைநிலைப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்

அல்லது

1.2.3. அரச உயர் தொழிநுட்ப நிறுவனமொன்றில் கணக்கியல், வர்த்தக விஞ்ஞானம் அல்லது முகாமைத்துவம் பற்றிய இடைநிலைப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்,

அல்லது

1.2.4. பட்டயக் கணக்காளர்களின் முகாமைத்துவ நிறுவனத்தின் (CIMA – ஐக்கிய இராச்சியம்) I, II மற்றும் III ஆகிய பகுதிகளில் சித்திபெற்றிருத்தல் அல்லது அதற்கு சமமான யாதேனும் ஒரு பரீட்சையில் சித்திபெற்றிருத்தல்.

அல்லது

1.2.5. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு மாகாண அரசாங்க சேவையில் பணிபுரியும் அத்திகதியன்று மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருக்கும் பதவியில் 10 வருட திருப்திகரமான சேவைக் காலத்தைக் கொண்டுள்ள மத்திய மாகாண அரசாங்க சேவையில் எழுதுநர் சேவை அல்லது அதற்கு சமமான சேவையில் (மத்திய மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையில்) உள்ள ஒருவராக இருத்தல் வேண்டும். (இவ்வலுவலர்களுக்கும் மேலே 1.1.5 இல் குறிப்பிட்டுள்ள வயதெல்லை ஏற்புடையதன்று)

2. சம்பள அளவுத்திட்டம் : -

2.1 2025.03.25 ஆம் திகதிய 10/2025 ஆம் இலக்க பொது நிருவாக சுற்று நிரூபத்தின் உப அட்டவணை II இற்கமைய MN 5-2025 சம்பளத் தொகுதிக்கு உரித்துடையதுடன், அதனடிப்படையில் சம்பள அளவுத்திட்டம் ரூபா 58,660 – 10×1190 - 11×1,360 - 15×1,670 - ரூபா 110,570/- ஆகும்

2.2 இச்சம்பளம் உங்களுக்கு உரித்தாவது 2027.01.01 ஆந் திகதி தொடக்கமாகும்.

2.3 நியமனம் செல்லுபடியாகும் திகதியிலிருந்து இச்சுற்று நிரூபத்தின் உப அட்டவணை III இற்கமைய சம்பளம் செலுத்தப்படும்.

3. சேவை நிபந்தனைகள் : -

3.1. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதிய உரித்துடையதுமாகும் தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசாங்கத்தினால் தொடர்ந்தேச்சையாக எடுக்கப்படும் இக்கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும்.

3.2. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர் மூன்று வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்தப்பட்டு குறிப்பிட்ட பதவியில் நியமிக்கப்படுவர்.

3.3. இப்பதவியில் நிரந்தரமாக்கப்படுவதற்காக மத்திய மாகாண வருமான சேவை பிரமாணக் குறிப்பின் உப அட்டவணையின் பின்னிணைப்பு (அ) (2) இல் குறிப்பிட்டுள்ள தகுதிகாண் பரீட்சையில் சித்தியடைய வேண்டியதுடன் அதில் சித்தியடைந்துள்ள உத்தியோகத்தர் தகுதிகாண் காலத்தின் இறுதியில் தாபன விதிக்கோவையின் ஏற்புகளுக்கமைய அப்பதவியில் நிரந்தரமாக்கப்படுவர்.

3.4. மத்திய மாகாண அரசாங்க சேவையில் நியமனங்கள் நிர்வகிக்கும் பொது நிபந்தனைகள் மற்றும் அரசாங்க/ மாகாண சபையினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

3.5. மத்திய மாகாண கௌரவ ஆளுநரினால் 2008.07.02 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட மத்திய மாகாண சபை மாகாண இறைவரித் திணைக்களத்தின் சேவை பிரமாணக் குறிப்பு மற்றும் ஆட்சேர்ப்பு திட்டத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் நிபந்தனைகள், அத்திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட, இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

4. ஆட்சேர்ப்பு முறை :

நிலவும் 100 சதவீதமான வெற்றிடங்களும் திறந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்யப்படும். நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நேர்முகப்பரீட்சையொன்றிற்கு உள்வாங்கப்பட்டு

பின்னர் அரசாங்க நிருவாக சுற்று நிருபம் 15/90 இற்கமைய மத்திய மாகாண சபை அரசாங்க சேவையின், மாகாண இறைவரி சேவையின் வகுப்பு 3 தரம் II இல் வரி உத்தியோகத்தர்கள் பதவிக்குத் தெரிவு செய்யப்படுவர்.

5. ஆட்சேர்ப்புப் பரீட்சை :

5.1. பரீட்சை ஊடகம்

இப்பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படும். தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலத்தின் சரியான இலக்கத்தினை தெளிவாக விண்ணப்பத்தில் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பிக்கும் மொழிமூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

5.2. பரீட்சை நிலையம்

- இப்பரீட்சை கண்டியில் மாத்திரம் நடாத்தப்படும்.
- பரீட்சை நிலையம் தொடர்பில் விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டைமூலம் அறியத் தரப்படும்.

5.3. அனுமதி அட்டை வழங்குதல்:

- இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ளார்கள் என்ற பூர்வாங்க தீர்மானத்தின்படி விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக பரீட்சைக் கட்டணத்தை செலுத்தி உரிய பற்றுச் சீட்டுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சை அனுமதி அட்டை வழங்கப்படும்.

- பரீட்சை அனுமதி வழங்கப்பட்டமை அல்லது பரீட்சைக்குத் தோன்றுதல் என்பன இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகவுத் திறமையை ஏற்றுக் கொண்டதென அமையாது.

- விண்ணப்பதாரர்களுக்கு அனுமதி அட்டை வழங்கியவுடன் அது தொடர்பில் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk எனும் இணையத்தளத்தில் பிரசுரிக்கப்படும். அனுமதி அட்டையானது பரீட்சை நடைபெறுவதற்கு 14 நாட்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர் விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலமாக அல்லது விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள கையடக்க தொலைபேசிக்கு குறுஞ் செய்தி (SMS) மூலமாக அனுப்பி வைக்கப்படும்.

- அறிவிப்பு வெளியாகி 04 அல்லது 05 நாட்கள் சென்ற பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கவில்லையாயின் அது தொடர்பாக அறிவித்தலில் குறிப்பிட்டுள்ளவாறு மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிடம் வினவுதல் வேண்டும். தங்கள் வசமுள்ள விண்ணப்பப்படிவத்தினதும் காசு செலுத்திய பற்றுச்சீட்டினதும் பிரதிகள், பதிவுத்தபாலில் அனுப்பிய பற்றுச்சீட்டுடன் பரீட்சையின் பெயர், விண்ணப்பதாரியின் முழுப் பெயர், தேசிய அடையாள அட்டை இலக்கம், முகவரி என்பவற்றை சரியாக குறிப்பிட்டு மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுக் காரியாலயத்தின் பரீட்சைப் பிரிவிடம் வினவுதல் வேண்டும். (தொலைபேசி இல. 081 – 2213097)

5.4. பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடல்:

இப்பரீட்சையின் பெறுபேறுகள் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk என்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தினூடாக வெளியிடப்படும்.

6. பரீட்சார்த்தியின் ஆளடையாளம்

6.1. அனுமதி அட்டையின்றி எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்படமாட்டார்கள். இப்பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தில் தாங்கள் தோற்றும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது அடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுவர். இதற்காக பின்வரும் ஆவணங்களில் ஒன்றினைச் சமர்பித்தல் வேண்டும்.

- ➢ ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை
- ➢ செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.
- ➢ செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

6.2. அவ்வாறே பரீட்சார்த்தியின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்த முடியுமான வகையில் தங்களது முகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பாடல் உபகரணங்கள் ஏதும் பாவிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துவதற்கு ஏதுவாக இரு காதுகளையும் மறைக்காது பரீட்சை மண்டபத்தினுள் பிரவேசிக்க வேண்டும். அதேபோன்று ஆளடையாளத்தை சான்றுப்படுத்துவதற்கு மறுக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சை மண்டபத்தினுள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை மண்டபத்தினுள் நுழைந்தது முதல் அதிலிருந்து வெளியேறும் வரை பரீட்சை அதிகாரிகளுக்கு விண்ணப்பதாரியை அடையாளம் காண முடியுமான வகையில் முகம் மற்றும் இரு காதுகளையும் மறைக்காதிருத்தல் வேண்டும்.

7. பரீட்சை பாடவிதானம் -

- பொது அறிவு மற்றும் உளச்சார்பு தொடர்பான ஒரு வினாப்பத்திரமாகும்
  (காலம் 01 ½ மணித்தியாலங்கள். 100 புள்ளிகள்)

இப்பரீட்சைத் தாள் 02 பகுதிகளைக் கொண்டது. ஒவ்வொரு பகுதிக்கு 50 புள்ளிகள் வீதம் வழங்கப்படும். முதல் பகுதி உளச்சார்பு பரீட்சைப் பத்திரமாகும். 45 நிமிடங்களுக்குள் இதற்கு விடையளித்து அதனைக் கையளித்தல் வேண்டும். பரீட்சார்த்தியின் பொது அறிவினைப் பரீட்சிப்பதற்கான இரண்டாவது பகுதியினை எஞ்சியுள்ள 45 நிமிடங்களில் விடையளித்தல் வேண்டும். இப்பொது அறிவு மற்றும் உளச்சார்பு பரீட்சையில் சித்தியடைய 40% இற்கு குறையாத புள்ளிகளைப் பெறுதல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள் நிரப்பியனுப்புவதற்கான அறிவுறுத்தல்கள் : -

இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக A4 அளவு தாளின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பங்களைத் தயாரித்து தமது சொந்தக் கையெழுத்தினாலேயே பூர்த்தி செய்தல் வேண்டும். இலக்கம் 01 முதல் 03 வரையிலான பந்திகள் முதலாம் பக்கத்திலும், இலக்கம் 05 முதல் 07 வரை இரண்டாம் பக்கத்திலும், ஏனையவை மூன்றாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வண்ணம் விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும். பரீட்சை அறிவித்தலில் தரப்பட்ட மாதிரிக்கு முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பமானது ஒத்திருக்கின்றது என்பதை உறுதிப்படுத்துவது பரீட்சார்த்தியின் பொறுப்பாகும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமையாத, உரிய திகதிக்கு முன்னதாக பரீட்சைக் கட்டணம் செலுத்தியிராத, சரியாக பூர்த்தி செய்திராத, முழுமையற்ற, மற்றும் அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள அடிப்படைத் தகைமைளைப் பூர்த்தி செய்திராத விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் பூர்த்தி செய்யாமல் நிராகரிக்கப்படும் விண்ணப்பங்கள் தொடர்பிலான இழப்பினை விண்ணப்பதாரரே பொறுப்பேற்க வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றினை வைத்திருப்பது உசிதமாதாகும்.

8.1 விண்ணப்பிக்கும் மாவட்டங்கள் என குறிப்பிடவேண்டியது விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டமாகும். மாவட்டங்களின் குறியீட்டு இலக்கங்கள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| கண்டி | - | 01 |
| மாத்தளை | - | 02 |
| நுவரெலியா | - | 03 |

8.2 விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு அல்லது பொது நிருவாக சுற்று நிரூபம் 10/2025 இல் தரப்படுத்தலுக்கமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட நிலை மட்டத்தில் அரசாங்க /மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் அலுவலரொருவரினால் சான்றுப்படுத்தல் வேண்டும்.

8.3 நியமனம் வழங்க முன், வழங்கிய பின், அல்லது யாதேனும் ஓர் சந்தர்ப்பத்தில் யாதாயினும் விண்ணப்பதாரர் இப்பதவிக்கு தகுதியற்றவரென உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவரது பரீட்சார்த்தத்தன்மை அல்லது நியமனம் இரத்துச் செய்யப்படும். மேலும், விண்ணப்பதாரர் ஒருவர் அறிந்த உண்மைக்கு மாறானதொரு தகவலை சமர்ப்பித்திருப்பதாக அவர் நியமனம் செய்யப்பட்டதன் பின் உறுதிசெய்யப்படும் பட்சத்தில் அவர் அரசாங்க சேவையிலிருந்து பதவி நீக்கம் செய்யப்படுவார்.

8.4 தற்போது அரசாங்க/ மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவரினூடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

9. விண்ணப்பிக்கும் முறை:-

9.1 பரீட்சைக் கட்டணம் ரூபா 600.00 ஆகும்.

9.2 விண்ணப்பதாரர்கள் தமது பரீட்சைக் கட்டணத்தை செலுத்தும் போது பின்வரும் நடைமுறைகளைக் கையாள வேண்டும்.

- அனைத்து விண்ணப்பதாரர்களும் பரீட்சைக் கட்டணமான ரூபா 600.00 இனை மத்திய மாகாண சபைக்கு செலுத்துதல் வேண்டும். இப்பரீட்சைக் கட்டணத்தினை மத்திய மாகாண பிரதான செயலாளரின் வருமானத் தலைப்பு 20-03-02-13 இல் வரவுவைக்கும் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னதாக மத்திய மாகாணத்திலுள்ள யாதேனும் ஒரு பிரதேச செயலாளர் காரியாலயத்தில் பணமாக செலுத்தி பெறப்படும் நீல நிற பற்றுச்சீட்டை விண்ணப்பத்தின் உரிய கூட்டினுள் கழறாதவாறு ஒட்டிவிட வேண்டும்.

- வேறு வருமான தலைப்பிற்கு செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு மற்றும் மத்திய அரசாங்கத்திற்குரிய மஞ்சள் நிற பற்றுச்சீட்டை ஒட்டி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பற்றுச்சீட்டின்றி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணங்கள் எக்காரணம் கொண்டும் மீள செலுத்தப்படமாட்டாது என்பதுடன் வேறு பரீட்சைகளுக்காக மாற்றீடு செய்யப்படவும் மாட்டாது. அத்துடன் பரீட்சைக் கட்டணமாக முத்திரை மற்றும் காசுக் கட்டளைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9.3 இவ்வறிவித்தலின் இறுதியில் இணைக்கப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கேற்ப தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்படும் விண்ணப்பங்கள் "செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல. 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி" என்ற முகவரிக்கு 2026.04.02 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறியத்தரமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் "வரி உத்தியோகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026" எனக் குறிப்பிடல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும். முழுமையுறாத மற்றும் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். தபாலில் தொலைந்த விண்ணப்பங்கள் சம்பந்தமாக இவ்வாணைக்குழு பொறுப்புக் கூற மாட்டாது.

10. பொய்யான தகவல்களுக்கான தண்டனை

10.1 இப்பரீட்சைக்கு ஏற்புடைய ஒழுங்கு விதிகளின் படி எவரேனும் பரீட்சார்த்தியொருவர் தகைமையற்றவர் என தெரிய வருமாயின் பரீட்சைக்கு முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலேனும் அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம்.

10.2 பரீட்சார்த்தியொருவர் வேண்டுமென்றே பிழையான தகவலை சமர்ப்பித்துள்ளாரென அல்லது வேண்டுமென்று ஏதேனும் ஒரு விடயத்தை மூடிமறைத்துள்ளாரென பின்னர் தெரியவருகையில், அவருக்கு நியமனம் வழங்குவது தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படமாட்டாது. அத்துடன் அவரது நியமனம் இரத்துச் செய்யப்படலாம் அல்லது அவர் அரச சேவையிலிருந்து நீக்கப்படலாம்.

11. இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள / குறிப்பிடாத விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம், இப்பரீட்சையை நிகழ்த்துதல், நிகழ்த்திய பின் தெரிவு செய்தல், தெரிவு செய்யாதிருத்தல், வெற்றிடங்களின் எண்ணிக்கை பற்றிய விளக்கமளித்தல், தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் என்பன மத்திய மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்குறியதாகும்.

12. இவ்வறிவித்தல் தொடர்பான மேலதிக விபரங்கள் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் www.psc.cp.gov.lk எனும் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் மாதிரி விண்ணப்பப்படிவத்தினை இங்கு பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

13. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப் படி

கே.கே.ஜி.ஐ.டி.பீ. விஜேதிலக,
செயலாளர்,
மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
மத்திய மாகாண சபை.

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி.
2026 பெப்புருவரி 27.

---

**மாதிரி விண்ணப்பப்படிவம்**

**மத்திய மாகாண மாகாண அரசாங்க சேவையின், மாகாண இறைவரி சேவையின் வகுப்பு 3 தரம் II இற்கு வரி உத்தியோகர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2026**

பரீட்சை இலக்கம்: [ ]
(அலுவலக உபயோகத்திற்கு)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் : [ ]
(சிங்களம் -2, தமிழ் – 3, ஆங்கிலம் – 4)
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடவும்)

நிரந்தர வதிவிட மாவட்டம்
கண்டி - 1 [ ]
மாத்தளை - 2
நுவரெலியா - 3
மாவட்டத்திற்குறிய இலக்கத்தினை கூட்டினுள் இடவும்

01. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : ……………………………………………………………………
Mr./Mrs./Miss (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்: உதா: SILVA, A.B.C.D) ……………………………………

1.2. முதலெழுத்துக்களுடன் பெயர் : ……………………………………………………………………
திரு./திருமதி/செல்வி (சிங்களத்தில்/தமிழில்)

1.3. முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்): ……………………………
……………………………………………………………………………………………………

1.4. முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர் (சிங்களத்தில்/தமிழில்): ………………………………………
……………………………………………………………………………………………………

02. 2.1 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்): …………………………………………………………………………
…………………………………………………………………………………………………………………………

2.2 பிரதேச அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (சிங்களத்தில்/தமிழில்): ………………………………………………
…………………………………………………………………………………………………………………………

2.3 பிரவேச அட்டை அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : …………………………………
…………………………………………………………………………………………………………………………

2.4 தற்போது அரசாங்க சேவையில் இருப்பவராயின் அலுவலக முகவரி: ………………………………………………
…………………………………………………………………………………………………………………………

2.5 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் | | | | | | | | | | | | |

2.6 பால் (ஆண் -0இ பெண்- 1) : | |

03. 3.1 பிறந்த திகதி : | Y | Y | Y | Y | M | M | D | D |

3.2 விண்ணப்பம் கோரப்படும் கடைசித் திகதிக்கு வயது :
வருடங்கள் : ……….. மாதங்கள் : ……… நாட்கள் : ……………..

3.3 கையடக்கத் தொலைபேசி இலக்கம் : | | | | | | | | | | |

04. சமூகநிலை :
திருமணமாகாதவர்- 1, திருமணமானவர்-2
(உரிய இலக்கத்தினை கூட்டினுள் இடவும்) | |

05. 5.1. நிரந்தர வதிவிட மாவட்டம் : ……………………………………

| *வாக்காளர் இடாப்பு பட்டியலின் அடிப்படையில்* | *2023* | *2024* | *2025* |
|---|---|---|---|
| தேர்தல் மாவட்டம் | | | |
| தேர்தல் தொகுதி | | | |
| வாக்காளர் பிரிவு | | | |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. | | | |
| வீட்டு இல. | | | |
| பெயருக்கு முன்னாலுள்ள தொடரிலக்கம் | | | |

06. கல்வித் தகைமைகள் :
6.1.

| *பல்கலைக்கழகம் அல்லது நிறுவனத்தின் பெயர்* | *பெற்றுள்ள பட்டம் / சித்தியடைந்துள்ள பரீட்சை* | *பட்டத்திற்கு அல்லது பரீட்சைக்குத் தோற்றிய பாடங்கள்* | *சித்தியடைந்த தரம்* | *சான்றிதழ் இலக்கம் மற்றும் பட்டம்/ பரீட்சை செல்லுப்படியாகும் திகதி* |
|---|---|---|---|---|
| | | | | |

6.2 சித்தியடைந்துள்ள அதி உயர் பரீட்சை
(அ) சிங்களத்தில்/ தமிழில் : ..........................................................................................................
(ஆ) ஆங்கிலத்தில் : ..........................................................................................................

07. விண்ணப்பதாரரினால் வகித்த பதவிகள் தொடர்பான விபரங்கள்

| *திணைக்களத்தின்/ நிறுவனத்தின் பெயர்* | *வகித்த பதவி* | *காலம்* | | *ஆண்டு சம்பளம்* |
|---|---|---|---|---|
| | | *முதல்* | *வரை* | |
| | | | | |

08. பரீட்சைக் கட்டணம் ரூபா. 600.00 செலுத்துதல் தொடர்பான விபரம் :

i. பணம் செலுத்திய பிரதேச செயலகம் : ..........................................................................................
ii. திகதி : ..........................................................................................
iii. பற்றுச்சீட்டின் இலக்கம் : ..........................................................................................

பற்றுச் சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும் (பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளல் பயனுள்ளதாக அமையலாம்)

09. நீங்கள் எத்தகையதுமான ஒரு குற்றச்சாட்டுக்காக நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? ..................
..........................................................................................................................................
ஆம் எனின், விபரங்களைக் குறிப்பிடவும் ..........................................................................................

10. விண்ணப்பதாரியின் உறுதியுரை :
இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன். மேலும் இப்பரீட்சை நடாத்துதல் மற்றும் பெறுபேறு வெளியிடல் தொடர்பாக மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுச் செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

.......................................
திகதி : ............................. பரீட்சார்த்தியின் கையொப்பம்

11. விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/ செல்வி ............................................... என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் இன்று என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

........................................................
திகதி : ............................. அத்தாட்சிப்படுத்தியவரின் கையொப்பம்

அத்தாட்சிப்படுத்திய உத்தியோகத்தரின் முழுப்பெயர் : ..........................................................................
பதவி : ..........................................................................
முகவரி : ..........................................................................
(உத்தியோக முத்திரையால் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

12. அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் தற்போது சேவையிலிருக்கும் விண்ணப்பதாரி எனின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்

இவ்விண்ணப்பதாரி திரு./ திருமதி /செல்வி. ………………………………………………………… என்பவர் இத்திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ………………………………………………………… ஆக கடமையாற்றுகிறார். இவரது ஆள்சார்புக் கோவைப் பரீட்சிக்கப்பட்டதுடன், அதனடிப்படையில்,

1. இவ்வுத்தியோகத்தர் தொடர்பில் தற்போது ஒழுக்காற்று அல்லது கணக்காய்வு விசாரணைகள் ஆரம்பிப்பதற்காக நடவடிக்கைகள்/ ஒழுக்காற்று அல்லது கணக்காய்வு விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன / மேற்கொள்ளப்படவில்லை
   1.1 ஆம் எனின், அதன் தற்போதைய நிலைமை தொடர்பான விபரம் …………………………………………… ……………………………………………………
2. அதனடிப்படையில் மேற்குறிப்பிட்ட தகவல்கள் சரியானவையும் என உறுதிப்படுத்துகின்றேன்.
3. இப்பதவிக்கு தெரிவு செய்யப்படின் தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க இணங்குகிறேன்.
4. உரிய விண்ணப்பப்படிவத்தினை நான் பரிந்துரைக்கின்றேன்/ பரிந்துரைக்கவில்லை.

………………………………………………………
திணைக்களம்/ நிறுவனத்தலைவரின் கையொப்பம்
(உத்தியோகப்பூர்வ முத்திரை)

திகதி: ………………………………

03-122

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.